

கோவை ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கில் நடைபெற்ற தந்தை பெரியார் திராவிடர் கழகம் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் அவர்களின் 75 பவளவிழா நிகழ்ச்சியில் கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் இராஜீவ் காந்தி, மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பொதுக்குழு உறுப்பினர் வெ.ந.உதயகுமார், பகுதி கழகச் செயலாளர்கள் ப.பசுபதி, கார்த்திக் செல்வராஜ், துரை.செந்தமிழ்ச்செல்வன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் கேசவன் உள்பட கழக நிர்வாகிகள், தந்தை பெரியார் திராவிடர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கோடைக் காலத்தை முன்னிட்டு

# 3 நாட்களுக்கு சுற்றுலாக்கள் ஏற்பாடு!

## சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தகவல்!

சென்னை, மே 7 -

கோடைக்காலத்தை முன்னிட்டு, ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு-ஒகேனக்கல், மைசூர் பெங்களூர் மற்றும் மூணார் உள்ளிட்ட மலைவாழிடங்கள் மற்றும் சுற்றுலா நகரங்களுக்கு 3 நாட்கள் சுற்று லாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு முன்பதிவுகள் நடைபெற்று வருகிறது என தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ். தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் கோடைக்காலத்தை முன்னிட்டு, ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு-ஒகேனக்கல், மைசூர்பெங்களூர் மற்றும் மூணார் உள்ளிட்ட மலைவாழிடங்கள் மற்றும் சுற்றுலா நகரங்களுக்கு மூன்று நாட்கள் செல்லும் சுற்றுலா பயணத் திட்டங்கள் பொதுமக்கள், சுற்றுலாப்பயணிகள் மற்றும் மாணவ, மாணவிகள் தங்களது கோடை விடுமுறையை முன்னிட்டு குடும்பத்துடன் செல்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு முன்பதிவுகள் நடைபெற்று வருகிறது.

மேலும் இக்கோடைக் கால சுற்றுலாக்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் கட்டணத்தில் சிறப்பு சலுகைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. தற்போது கோடை விடுமுறை என்பதால் கீழ்க்கண்ட சிறப்பு சுற்றுலாக்கள் ஏப்ரல் 2025 முதல் ஜீன் 2025 வரை இயக்கப்படுகிறது.

3 நாட்கள் ஊட்டி சுற்றுலா செல்லும் பேருந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலத்தில் இருந்து ஒவ்வொரு வாரம் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு புறப்பட்டு, திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு வந்தடையும். 3 நாட்கள் ஊட்டி சுற்றுலா பயணத்தில் தொட்டபெட்டா மலைச் சிகரம், ஊட்டி தாவரவியல் பூங்கா (பொட்டானிக்கல் கார்டன்), ஊட்டி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகு குழாமில் படகு சவாரி ஆகிய இடங்களுக்கு சுற்றுலா பயணிகள் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

3 நாட்கள் கொடைக்கானல் சுற்றுலா செல்லும் பேருந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலத்தில் இருந்து ஒவ்வொரு வாரம் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு புறப்பட்டு, திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு வந்தடையும். 3 நாட்கள் கொடைக்கானல் சுற்றுலா பயணத்தில் கொடைக்கானல், தூண் பாறை, பசுமை சமவெளி, கோக்கர்ஸ் வாக், கொடைக்கானல் நட்சத்திர ஏரியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக படகுகுழாமில் படகு சவாரி, வெள்ளி நீர்வீழ்ச்சி ஆகிய இடங்களுக்கு சுற்றுலா பயணிகள் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

3 நாட்கள் ஏற்காடு - ஒகேனக்கல் சுற்றுலா செல்லும் பேருந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலத்தில் இருந்து ஒவ்வொரு வாரம் வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணிக்கு புறப்பட்டு திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு வந்தடையும். 3 நாட்கள் ஏற்காடு - ஒகேனக்கல் சுற்றுலா பயணத்தில் ஏற்காடு, ஜென்ஸ் சீட், லேடீஸ் சீட், பகோடா பாயிண்ட், ரோஸ் கார்டன், ஏற்காடு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக படகுகுழாமில் படகு சவாரி, ஒகேனக்கல் - நீர்வீழ்ச்சி ஆகிய இடங்களுக்கு சுற்றுலா பயணிகள் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

3 நாட்கள் மைசூர் - பெங்களூர் சுற்றுலா செல்லும் பேருந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலத்தில் இருந்து ஒவ்வொரு வாரம் வெள்ளிக்கிழமை இரவு 9.30 மணிக்கு புறப்பட்டு திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு வந்தடையும். 3 நாட்கள் மைசூர் - பெங்களூர் சுற்றுலா பயணத்தில் சாமுண்டீஸ்வரி கோயில், நந்தி, மைசூர் அரண்மனை, பிருந்தாவனம் கார்டன், பெங்களூர் ீரங்கபட்டினம், திப்பு கோடைக்கால அரண்மனை, லால்பாக் பூங்கா ஆகிய இடங்களுக்கு சுற்றுலா பயணிகள் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

3 நாட்கள் குற்றாலம் சுற்றுலா செல்லும் பேருந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலத்தில் இருந்து ஒவ்வொரு வாரம் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு புறப்பட்டு திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு வந்தடையும். 3 நாட்கள் குற்றாலம் சுற்றுலா பயணத்தில் குற்றாலம் நீர் வீழ்ச்சி, தென்காசி, ீவில்லிப்புத்தூர், மதுரை ஆகிய இடங்களுக்கு சுற்றுலா பயணிகள் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

3 நாட்கள் மூணார் சுற்றுலா செல்லும் பேருந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலத்தில் இருந்து ஒவ்வொரு வாரம் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு புறப்பட்டு திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு வந்தடையும். 3 நாட்கள் மூணார் சுற்றுலா பயணத்தில் மூணார் மறையூரில் புத்துணர்ச்சி பெறுதல், இரவிக்குளம் வனவிலங்கு சரணாலயம், பிளாஸம் பார்க் ஆகிய இடங்களுக்கு சுற்றுலா பயணிகள் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

இத்தொகுப்பு சுற்று லாக்களில் தங்கும் வசதி மற்றும் 6 வேளை உணவு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்படுகிறது. சுற்றுலா பயண திட்டங்களை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பயணிகளின் எண்ணிக்கையை பொறுத்து, வால்வோ சொகுசு பேருந்துகள், உயர்தர சொகுசு பேருந்துகள், 18 இருக்கைகளுடன் கூடிய சிற்றுந்து சொகுசு பேருந்துகளை கொண்டு இச் சுற்றுலாக்களை இயக்கி வருகிறது.

சுற்றுலா பயணத்திற்கான கட்டணங்கள் ரூபாயில்: (நபர் ஒருவருக்கு)

| | ஊட்டி | கொடைக் கானல் | ஏற்காடு – ஒகேனக்கல் | மைசூர் – பெங்களூர் | குற்றாலம் | மூணார் |
|---|---|---|---|---|---|---|
| தனி அறை | 8500 | 8500 | 8000 | 8200 | 8000 | 8300 |
| இருவர் பகிரும் அறை | 7300 | 7300 | 7000 | 7000 | 7000 | 7100 |
| சிறியவர்கள் | 6900 | 6900 | 6800 | 6700 | 6500 | 6800 |

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மற்ற பயணத் திட்டங்களுக்கு www.ttdconline.com என்ற இணைய தள பக்கத்திலும், அல்லது சென்னை வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நேரடியாகவும் முன்பதிவு செய்யலாம்.

மேலும் கூடுதல் விவரங்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தொலைபேசி எண்கள்: கட்டணமில்லா தொலைபேசி எண். 18004251111 04425333333, 04425333444 மற்றும் வாட்ஸ் அப் எண். 7550063121 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.

# மாதவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் 23 ‘அ’ வட்டத்தில் நீர் மோர் பந்தல்!

சென்னை, மே 7 -

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில், 23அ வட்டத்தில், தமிழ்நாடு துணை முதலமைச்சர்,கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி தண்ணீர் பந்தல் திறந்து வைக்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்டத்திற்குட்பட்ட காவாங்கரை பேருந்து நிறுத்தம் அருகே, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் அ. சாந்தகுமார் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது.

23 வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர். டி. மதன்குமார் ஆகியோர் கலந்து கொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள், வாகன ஓட்டிகள், பேருந்தில் செல்பவர்கள், வியாபார பெருங்குடி மக்கள் ஆகியோருக்கு

தர்பூசணி, கிர்ணிப்பழம், மலாம்பழம், வெள்ளரிக்காய், ரோஸ் மில்க், நீர் மோர், இளநீர் ஆகியவற்றை வழங்கினார்கள்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சி. எஸ். எஸ். டி. சீனிவாசன், கேபிள் த.வே. கணேசன் ஜி.கே இனியன், வட்டக் கழக நிர்வாகிகள் ராமச்சந்திரன், உசேன் மைதீன், ஹரி, சுதாகர், அம்மு மூர்த்தி, அறிவழகன், பார்பன், முத்து கிருஷ்ணன், அப்துல் சமது, பார்த்திபன், பகுதி இளைஞரணி அமைப்பாளர் ர. விஜய் ஆனந்த், மாதவரம் தெற்கு பகுதி அமைப்பாளர் வினோத், திருவொற்றியூர் மத்திய பகுதி அமைப்பாளர் ஸ்டா லின், மாதவரம் வடக்கு பகுதி துணை அமைப்பாளர்கள் எலந்தனூர் வி. சிவபிரகாஷ், டோமினி பிரான்சிஸ் தேவராஜ், அன்பழகன், பாஸ்கர் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.



நாகை மாவட்டம் கீழ்வேளூர் அரசு மேல் நிலைப் பள்ளி மைதானத்தில் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்க துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி மூலம் அடிக்கல் நாட்டியதை தொடர்ந்து சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட உள்ள இடத்தை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் ஆகியோர் பார்வையிட்டனர். உடன் கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி, தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றியச் செயலாளருமான ப.கோவிந்தராசன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பழனியப்பன், கீழ்வேளூர் பேரூர் செயலாளர் கா.அட்சயலிங்கம் மற்றும் பலர் உள்ளனர்.

### நாடு போற்றும் நான்காண்டு! தொடரட்டும் இது பல்லாண்டு!

# தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிவிப்பு!



கழகத்தலைவர்,தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின்படி “நாடுபோற்றும் நான்காண்டு,தொடரட்டும் இது பல்லாண்டு”என்ற தலைப்பில் ஒன்றிய கழகம் வாரியாக சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்ற ஆணைக்கிணங்க தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கீழ்க்கண்ட இடங்களில் பொதுக்கூட்டங்கள் பின்வருமாறு நடைபெறும்.

| நாள் | சட்டமன்றத் தொகுதி | ஒன்றியம் /நிகழ்ச்சிஏற்பாடு | பேச்சாளர்கள் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 08.05.2025 | அரூர் | மொரப்பூர் மேற்கு **M.**ரத்தினவேல் ஒன்றியகழகசெயலாளர் | போர்வாள் துரைசாமி | கதிர்நாய்க்கனஅள்ளிஊராட்சி |
| | பாப்பிரெட்டிப்பட்டி | தருமபுரிவடக்கு **N.A.**மாது ஒன்றியகழகசெயலாளர் | ஆர்.குணாளன் | குப்பூர் ஊராட்சி |
| | | கடத்தூர் மேற்கு **R.**சிவப்பிரகாசம் ஒன்றியகழகசெயலாளர் | ஆத்தூர் வெங்கடேசன் | சில்லாரஅள்ளிஊராட்சி |
| | பாலக்கோடு | காரிமங்கலம் கிழக்கு **T.**அன்பழகன் ஒன்றியகழகசெயலாளர் | கனல் ஆர்.சுப்பிரமணி | மாட்லாம்பட்டிஊராட்சி |
| 09.05.2025 | அரூர் | அரூர் கிழக்கு கோ.சந்திரமோகன் ஒன்றியகழகசெயலாளர் | ஜெ.ரேகாபிரியதர்ஷினி | தீர்த்தமலைஊராட்சி |
| | பாப்பிரெட்டிப்பட்டி | தருமபுரிதெற்கு **Dr.M.**பிரபுராஜசேகர் ஒன்றியகழகசெயலாளர் | அ.முகம்மதுநியாஸ் | கிருஷ்ணாபுரம் ஊராட்சி |
| | பாலக்கோடு | பாலக்கோடுமத்தியம் **S.**முனியப்பன் ஒன்றியகழகசெயலாளர் | சேலம் தரணிவேந்தன் | பேவுஅள்ளிஊராட்சி கோட்டூர் |

| நாள் | சட்டமன்றத் தொகுதி | ஒன்றியம் /நிகழ்ச்சிஏற்பாடு | பேச்சாளர்கள் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 10.05.2025 | அரூர் | அரூர் மேற்கு வே.சௌந்திரராசு ஒன்றியகழகசெயலாளர் | ஆர்.குணாளன் | பறையப்பட்டிபுதூர் ஊராட்சி கோபிநாதம்பட்டி கூட்ரோடு |
| | பாப்பிரெட்டிப்பட்டி | பாப்பிரெட்டிப்பட்டிகிழக்கு **C.**முத்துக்குமார் ஒன்றியகழகசெயலாளர் | போர்வாள் துரைசாமி | வெங்கடசமுத்திரம் ஊராட்சி |
| | பாலக்கோடு | பாலக்கோடுமேற்கு **P.K.**அன்பழகன் ஒன்றியகழகசெயலாளர் | பூலாவரிஎம்.ஜெயவேல் | கொலசனஅள்ளிஊராட்சி வேப்பலஅள்ளி |
| 11.05.2025 | அரூர் | அரூர் வடக்கு **R.**வேடம்மாள்,**Ex.MLA** ஒன்றியகழகசெயலாளர் | அ.முகம்மதுநியாஸ் | H.ஈச்சம்பாடிஊராட்சி |
| | பாப்பிரெட்டிப்பட்டி | பாப்பிரெட்டிப்பட்டிமேற்கு **B.S.**சரவணன் ஒன்றியகழகசெயலாளர் | கனல் ஆர்.சுப்பிரமணி | பொம்மிடிஊராட்சி B.துறிஞ்சிப்பட்டி |
| | பாலக்கோடு | காரிமங்கலம் மத்தியம் **R.**கண்ணபெருமாள் ஒன்றியகழகபொறுப்பாளர் | 1.ஜெ.ரேகாபிரியதர்ஷினி 2.கொ.ரமேஷ் (இளம் பேச்சாளர்) | பொம்மஅள்ளிஊராட்சி கூட்ரோடு |
| 12.05.2025 | அரூர் | மொரப்பூர் கிழக்கு **E.T.T.**செங்கண்ணன் ஒன்றியகழகசெயலாளர் | ஒசூர்.ஏ.எஸ். அப்துல்ரகுமான்பாரி | R.கோபிநாதம்பட்டி ஊராட்சி |
| | பாப்பிரெட்டிப்பட்டி | தருமபுரிகிழக்கு **K.P.**சக்திவேல் ஒன்றியகழகசெயலாளர் | போர்வாள் துரைசாமி | கொண்டகரஅள்ளி ஊராட்சி வத்தல்மலை பெரியூர் |
| | | கடத்தூர் கிழக்கு**T.**நெப்போலியன்ஒன்றியகழகசெயலாளர் | பூலாவரிஎம்.ஜெயவேல் | இராமியனஅள்ளிஊராட்சி |
| | பாலக்கோடு | காரிமங்கலம் மேற்கு **M.V.T.**கோபால் ஒன்றியகழகசெயலாளர் | ஆத்தூர் வெங்கடேசன் | ஜிட்டாண்டஅள்ளி ஊராட்சி |

அதுசமயம் இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய,பேரூர் கழகசெயலாளர்கள், கிளை கழக வார்டு கழக செயலாளர்கள், சார்பு அணிநிர்வாகிகள், இந்நாள் முந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாகநிலைமுகவர்கள் (BLA-2),பாக இளைஞர்கள் ,பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLC) கழகநிர்வாகிகள், கழகசெயல்வீரர்கள் பொதுமக்கள் அனைவரும் அந்தந்த ஒன்றியங்களில் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**முனைவர்**
**பி.பழனியப்பன்**
செயலாளர்
தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க.